RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1418

OPEN ACCESS

# சங்க அகப்பாடல்களில் பெண்களின் பருவம் சொல்லப்பட்டதும், சொல்லப்படாததும்

**வி. ஜெபா ஷாலினி [அ, *], அ. சஜன் [அ]**

[அ] தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டாம்-629165, தமிழ்நாடு, இந்தியா.

# The Growth of Women in Sangam Internal Songs ooth Spoken and Unspoken

**W. Jaba Shalini [a, *], A. Sajan [a]**

[a] Department of Tamil, Nesamony Memorial Christian College, Marthandam-629165, Tamil Nadu, India

* Corresponding Author: jabashaliniw@gmail.com

Received: 16-11-2021
Revised: 24-08-2022
Accepted: 06-09-2022
Published: 29-11-2022

Check for updates

**ABSTRACT**

Women's lifestyle was best described very subtly in Sangam Aga Ilakkiyam. Sangam literature has survived many centuries after carrying the proofs of history, and the seed to architect the grammar for the previous generations. The comments registered about women's different stages of life such as teenage, love, and family life were to be researched. There are not many kinds of literature which talk about women's thoughts about love. Later, various kinds of literature such as kaapiyam, bhakthi and sitrilakkiyam spoke in detail about the different stages of women. Sangam literature does not speak about the different stages of women transparently, however, the growth of women according to age and its function were described clearly by poets. This research article studies the significant impact of the change in the lifestyle before and after puberty is researched through Sangam literature.

**Keywords:** Sangam Anthologies, Growing Girls, Puberty, Season

## முன்னுரை

சங்க அகப்பாடல்கள் பெண்களின் வாழ்க்கை முறைகளை மிக நுட்பமாகவும், சிறப்புடையதாகவும் வெளிப்படுத்துகின்றது. காலங்களை கடந்து நிற்கும் சங்கப்பாடல்கள் பல வரலாற்று சான்றுகளையும், பிற்கால இலக்கண இலக்கியங்கள் தோற்றுவிக்க விதையாகவும் இருந்தமையை காண முடிகிறது. அகக்கருத்துகளை களவு, கற்பினடிப்படையில் பெண்களின் முக்கிய காலக்கட்டமான வளர்பருவம் குறித்து சங்கப்பாடல்கள் பதிவுசெய்துள்ளதை ஆராய வேண்டியது அவசியமாக காணப்படுகிறது. களவு வாழ்வை பேசும் சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக திகழும் நூற்களும் பெண்களின் பருவங்களை அதிகம் பேசவில்லை. பின்னர் எழுந்த காப்பிய, பக்தி, சிற்றிலக்கிய நூற்களுக்கு இலக்கணமாக திகழும் பாட்டியல் நூற்களே உலா வகைமைக்கு பதிவு செய்கிறது. சங்க நூற்கள் வெளிப்படையாக பருவங்களின் வகைப்பாட்டை பேசவில்லையாயினும், வளர்பருவ பெண்களின் உடல் வளர்ச்சி படிநிலைகள், செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் புலவோர் குறிப்பிட்டுள்ளதை காண இயலும். அஃதோடு பெண்கள் எந்த வயதில் பூப்படைகின்றனர், அதற்கு முன்னரான வாழ்க்கை எந்நிலையிலிருந்து பிந்தைய வாழ்க்கைக்கு பருவமெய்துதல் எவ்விதத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. என்பதை சங்கப்பாடல்களின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கண வரையறைகளும் - பருவங்களும்

தொல்காப்பியமும், களவியல் உரையும் வரையறை செய்யாத மங்கையரின்பருவங்களை சங்க நூற்கள் வகைப்படுத்தியுள்ளன. தொல்காப்பியத்திற்கு உரைசாற்றிய இளம்பூரணார் "ஊரொடு தோற்றமும் என்பதற்கு பேதை முதலாக பேரிளம் பெண் ஈறாக வருவது. எனபருவத்திற்கு ஏற்ற செய்யுளாக விளக்கம் தந்துள்ளார் (Ilampuranar, 2008). நச்சினார்கினியரும் ஏழு பருவங்களாக உலா வகைக்கு விளக்கம் தந்துள்ளார். பின்னர் எழுந்த நூற்களும் உலாவிற்கு இலக்கணம் கூறும் வகையிலே பதிவு செய்துள்ளன.

சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணமாக திகழும் பாட்டியல் நூல்கள் பருவகாலங்களை குறிக்கும் போது சில மாற்றங்களோடு மட்டுமே வேறுபடுகின்றன. பன்னிரு பாட்டியலானது.

"எழுநிலையும் இயம்புங் காலை

பேதை பெதும்பை மங்கை மடந்தை

அரிவை தெரிவை பேரிளம் பெண்ணென"

என பருவங்களை ஏழாகக்கூறுவதோடு கால எண்ணிக்கையையும் குறிப்பிடுகிறது (Ilampuranar, 2008). பேதை 5-8, பெதும்பை9-10, மங்கை11-14, மடந்தை15-18, அரிவை 19-24, தெரிவை 25-29, பேரிளம்பெண் 30-36, நவநீதபாட்டியலும், பேதை 5-7, பொதும்பை 8-11, மங்கை 12-13, மடந்தை 14-19, அரிவை 20-25, தெரிவை 26-31, பேரிளம்பெண் 32-40, என வரையறை செய்கிறது. சூடாமணியும் இவ்வாறே குறிப்பிடுகின்றது. பிங்கல நிகண்டானது பேதை 7, பெதும்பை 11, மங்கை 13, மடந்தை 19, அரிவை 25, தெரிவை 31, பேரிளம் பெண் 36, என பதிவு செய்கிறது. தனிப்பாடல் திரட்டு, இலக்கணவிளக்கப்-பாட்டியல் முதலிய இலக்கண நூற்கள் பலவும் உலாவிற்கு இலக்கணம் கூறுகிறது.

## சங்கப்பதிவும் - பருவப்பெண்களும்

சங்கப்பாடல்கள் பெண்களின் பருவங்களை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என பதிவு செய்கிறது. ஒவ்வொரு பருவ செயல்பாடுகள், ஆடை அணிகலன்கள், விளையாட்டுகள், தொழில்கள், பொழுதுபோக்குகள் ஆகியன பருவகாலங்களை குறிப்பிட உதவுகின்றன. இவ்வளர் பருவ மங்கையர் குறித்து சங்கப்பாடல்கள் கூறியவையும், முழுமையாக கூறப்பெறாதவற்றையும் பதிவு செய்வது இங்கு அவசியமாகிறது. பருவங்களை பேசும் முன் பிள்ளைப்பருவம் (சிறார்) குறித்து குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. சிறாஅர் என சிறுவர், சிறுமியரை பொதுவாக பதிவு செய்தல்லாமல், 'புதல்வி' என சிறுமியரை சங்கப்பாடல்கள் அதிகமாக பதிவு செய்யவில்லை. புதல்வர், புதல்வனை பெற்றதாய் தமையன் என்றே பாடல்கள் பதிவு செய்கிறது. திருமணத்தின் போது கூட மேடையில் புதல்வனை பெற்ற தாய்மார்களே சடங்குகளை மேற்கொண்ட செய்திகளை சங்கப்பாடல்களில் காண இயலும். இச்சிறார் அணியும் அணிகலன்களே வளர்பருவங்களை கணக்கிடுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## பேதை பருவம்

எழுபருவ மங்கையோரின் பருவநிலையில் முதன்மை பெறும் பருவம் பேதைப் பருவமாகும். 5-7 ஆண்டாக இப்பருவ மகளிரின் பருவகாலத்தை கணக்கிடலாம். சிறார் பருவம் தாண்டி, கேள்விகள் எழுப்பாக்கூடிய, அறிவிலியுடன் செயல்படும் பருவம் எனவும் கொள்ளலாம். வெளிப்படையாக சிந்திக்கக்கூடிய தன்மையற்ற இப்பருவத்தை.

"பிள்ளைமை விளம்பினாய் பேதை நீயேனா"

என பிள்ளைத் தன்மையாக கம்பராமாயணம் பதிவு செய்கிறது (Gnanasambanthan, 2000). மடக்குறுமாக்கள், பேதைமையுடையவள், பேதை பெண், என குறிக்கப்-பட்டாலும், பேதைமை மடப்பமுடையவள் என பிற பருவ மகளிரைக் குறிக்கவே பல இடங்களில் பயின்று வருவதைக் காண

இயலும். இயற்கைப் புணர்ச்சியின் போது ஊழ்வினை குறிக்குமிடங்களில் அல்லது பேதை பருவத்தில் சிற்றிழைத்து விளையாடிய நிகழ்வையும், தலைவன் சிறுபருவத்தில் செய்த குறும்புகளை நினைவூட்டும் நிலைகள் தான் சங்கத் தரவுகளில் அதிகமாக காணக் கிடைக்கிறது. களவில் இப்பருவம் இடம்பெறாபருவமாகயால் இப்பருவப் பெண்கள் குறித்ததான பெரிதான விளக்கங்கள் காணப்பெறவில்லை. எனவும் கொள்ள இயலும்

## பெதும்பை பருவம்

எட்டு முதல் பதினொன்று வயதுடைய பருவம் பெதும்பை எனக்கொள்ளலாம். இப்பருவ பெண்கள் குறித்த தரவுகள் அதிகமில்லையாயி-னும் பிற்பருவ மகளிரை அடையாளப் படுத்துவதற்கு இப்பருவமே முன்னோடியாக திகழ்கிறது. சுருங்கக் கூறினால் “காமப்பருவம் எய்துவதற்கு முன்னுள்ள பருவம், பூப்பு எய்துவதற்கு முன்னரான உடல் வளர்ச்சி மாறுபாடுகள் தோன்றும் பருவம்” எனக் கொள்வது சரியானது. திருக்குற்றால நாதர் உலாவின் முகவுரையில் உ.வே.சா. பதிவு செய்யும் போது காம உணர்ச்சி ஒருவாறு அரும்பி அதனை உணர்ந்தும் உணராததுமான நிலையிலுள்ள பருவம் எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து ஒப்புநோக்கத்தக்கது. ஆயினும் நற்339 களவொழுக்க நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொல்காப்பியாரின் “காமஞ்சாலா இளமையோள்வயின்” நூற்பாவானது பருவம் எய்தா நிலையிலுள்ள பெண்ணை பருவம் எய்தியவளாக (உடல்தோற்றம்) நினைந்த தலைவனின் செயலைபதிவு செய்கிறது. இவ்வுணர்வு இருபாலினரிடமும் தோன்றுமென நம்பி அகப்பொருள் சுட்டுகிறது. கைக்கிளை இங்கு பேசப்படுவதன் நோக்கமென்ன? என்றக் கேள்விக்கு பதில் பெதும்பை பருவம் இருநிலைகளில் கூறப்படுவதே ஆகும் (Ilampuranar, 2008).

கலி. குறி.56-ல் இளமை எழிலோடிருக்கும் தலைவியைக் கண்ட தலைவன் அவள் மீது காதல் வயப்பட்டு அவளது அழகினைக் கூறி காமுற்றதாக குறிப்பிடபட்டுள்ளது. இஃது பருவ மெய்தாத போதும் பெண்ணின் உடற்தோற்றத்தைக் கண்டு காமுற்ற தலைவனின் நிலையைச் சுட்டுக்கிறது. கலித்தொகையின் பிறப்பாடல்களான ஆகியவையும் கைக்கிளைப் பாற்பட்டன (Puliyur Kesikan, 2011).

இப்பருவத்தில் (பெதும்பை) பெண்ணின் உடல் வளர்ச்சி பெறுவதை கவனிக்கும் தாய் தலைவியின் ஒவ்வொரு அவயவங்களின் மாறுதலைக் குறிப்பிட்டு,

“முலை முகம் செய்தன முள் எயிறு இலங்கின

தலைமுடிசான்ற; தண் தழை உடையை

அலமரல் ஆயமொடு யாங்கணும் படா அல்

மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய

காப்பும் பூண்டிசின் கடையும் போகலை

பேதை அல்லை - பேதை அம் குறுமகள்

பெதும்பைப்பருவத்து ஒதுங்கிணைபுறத்து”

இப்பாடல்வரிகளாவது தலைவிபேதை கடந்து பெதும்பை பருவத்தில் பருவமெய்தியதை குறிப்பிடுவதாக காணப்படுகிறது (Puliyur Kesikan, 2010). கூந்தலின் வளர்ச்சி, தழையாடை உடுத்துதல், வெளியில் செல்ல வேண்டாம், அணங்கு தொற்றும் எனக் கூறுவது அறிவிலியாக (பேதை) இருந்த புதல்வி பெதும்பையாக வளர்ந்து விட்டாள் என்பதை கற்று கொடுப்பது போல் தோன்றுகிறது. இப்படாலின் இறுதி அடிகள் “பொன்னாற் செய்த புலிப்பல்லோடு கோத்த தனி மணித்தாலியினை” தனது புதல்விஅணிந்திருப்பதாக தாய் கூறுவதிலிருந்து பிள்ளைப் பருவம் முதல் பருவமெய்தும் வரை இவ்வணிகலன் அணிந்திருக்க வாய்ப்புள்ளது.

## மங்கைப் பருவம்

12-14 வயதுடைய பருவம் மங்கைக்குரியது. காம உணர்வுகள் நிறைவு பெறும் பருவம் எனக் கூற இயலும். சங்கப்பாடல்கள் பொதுவாக பெண்களைக் குறிப்பதற்கு மங்கையர் என பேசியுள்ளதைத் தவிர மங்கை பருவ அடையாளத்துடன் பதிவு செய்யப்படவில்லை. ஏன்? என்ற கேள்வியை முன் வைத்து பார்க்கும் நிலையில் பெதும்பையில் முழுமைப் பெறாத உணர்வுகள், உடல்வளர்ச்சி அனைத்தும் இப்பருவத்தில் முழுமை பெறுவதைக் காணலாம். பெதும்பை பருவத்தில் தனது தாயாரால் காவலுக்குட்பட்ட பெண்ணானவள் புலிப்பல் அணிகலனைபிற பருவங்களில் அணிந்ததாக குறிக்கப் பெறவில்லை. மட்டுமல்லாது பிள்ளைப்பருவம் முதலாக பெதும்பை வரை பொற்கிண்கிணி அணிந்துள்ளதால்`, மங்கைப்பருவத்திலேயே பூப்படைந்துள்ளனர் என்பதை, சிலம்பு, தழை ஆடைகள், வளையல்கள் அணிந்திருப்பதன் வாயிலாக அறிய முடிகிறது. பெதும்பையோடு ஒப்புநோக்கும் நிலையில் மங்கையிலேயே பெரும்பாலும் பூப்பு எய்தியிருக்க கூடும் என்பது புலனாகிறது.

## மடந்தை

15-19 வயது வரையுள்ள பருவம் மடந்தை, காமபருவமெய்திய மங்கையானவள் தனது தமையன், நற்றாயால் தொழில்களுக்கு அனுப்படும் காலகட்டம் இயற்க்கைப் புணர்ச்சி வாயிலாக தலைவனை சந்திக்கும் தலைவி இப்பருவத்தில் விடலை பருவத்தலைவனோடு உடன்போக்குச் செல்லுதலும் உண்டு (Puliyur Kesikan, 1976). நுண்ணிய வேலைப்பாடமைந்த அணிகலன்கள் (Puliyur Kesikan, 2018), தழை களிடையே பூக்களால் தொடக்கப்பட்ட ஆடைகள், தொய்யில் எழுதப்பட்ட மார்புகள், சிலம்பணிதல் (Puliyur Kesikan, 2018) பூக்களணிதல் போன்றவை இப்பருவ மங்கையரின்பருவச் செயல்களாக காண இயலும். பூ அணிதல் குறித்த கருத்தில் 'கன்னியர் பூ அணிதலில்லை' என பதிவிட்டுள்ளார் (Manickam, 2005). கூந்தல் நீண்டு வளர்ச்சி பெறாததால் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

"பல்கால் யாம் - கான்யாற்று அவிற் மணற் தண் பொழில்

அல்கல் அகல் அறை, ஆயமொடு ஆடி

முல்லைக் குருந்தொடு முச்சி வேய்ந்து"

மேற்கண்ட கலிப்பாடலில் முல்லையைக் குருத்தம் பூவோடு உச்சியில் சூடி ஆயத்தொடு விளையாடியமை சுட்டப்பெறுகிறது (Puliyur Kesikan, 2011). சிறு பருவத்திலிருந்து கன்னியரும் பூச்சூடியுள்ளனார் என்பது தெளிவாகிறது. இஃதுமேலாய்வுக்குட்பட்டதாகும்.

## அரிவை

20-24 வயது வரையுள்ள பருவம் அரிவையாகும். "பெண் இயல் காமர் அடர் நூதல் விளங்கும் தே மொழி அரிவை!" (Puliyur Kesikan, 1976) என அரிவைப் பருவ பெண்ணை, 'பெண்மையின் இயல் எல்லாம் ஒருங்கே பெற்றிருக்கும் பருவமென' ஐங்குறுநூறு பதிவு செய்கிறது. இவ்வாறு உரைப்பதால் அரிவைப் பருவ மங்கையர் வரைவு கடந்தோர் எனக் கொள்ள இயலுவதில்லை. களவு வாழ்வு இங்கும் நடைப்பெற்றுள்ளது. களவின் போது தலைவன் அரிவைக்கு பூச்சூடியதை பதிவு செய்கிறது. உடன்போக்கும், வரைவும், தாய்மையும், இப்பருவத்தில் நிகழ்தமையை காண இயலும் (Puliyur Kesikan, 2010).

## முடிவுரை

மேற்கண்ட ஆய்வின் தெளிவாக சங்ககால பெண்களின் வாழ்க்கையில் முதன்மை பெறுவது பருவமாகும். சிறாஅர் பருவந்துவங்கி வளர்பருவ மெய்தும் போது வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் பல நிகழ்வுகளை ஏற்படுத்துக்கின்றன. இஃது தெளிவாக சங்கப்பாடல்களில் கூறப்படாவடினும், பிற்கால இலக்கண நூற்களுக்கு முன்னோடியாக இருந்ததைக் காணமுடிக்கிறது. பெதும்பை பருவத்தில் மகளிர்

பூப்பெய்தினாலும், மங்கைப் பருவத்திலேயே பெரும்பான்மையாக பூப்பெய்தியுள்ளனார்' என்பது புலனாகிறது 'பூப்பெய்துதல்' சுதந்திரமான வாழ்க்கைக்கு அடிப்படையாக இருந்ததையும், மடந்தை, அரிவை பருவங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியதையும் காணமுடிகிறது. ஆகையால் களவு (காதல்) வாழ்வே சங்க இயக்கியத்திலும், தமிழரின் வாழ்விலும் சிறப்பிடம் பெற்றிருக்க இயலும்.

## References


Gnanasambanthan, A.S. (2000) Kambaramayanam Yuththa Kaandam, Gangai Puththaga Nilaiyam, Chennai, India.

Ilampuranar, (2008) Tholkappiyam -Ilampuranar Urai, Saradha pathippagam, Chennai, India.

Manickam, V.S. (2005) Tamil Kadhal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Puliyur Kesigan, (2005) Pathitrupathu, Paari Niliyam, Chennai, India.

Puliyur Kesikan (2011) Kalithogai, Sri Senbaga Pathippakam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2018) Nattrinai, Paari Niliyam, Chennai, India.

Varatharasan, M. (1976) Ettuthogai, Paari niliyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License